கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 48/2013

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 வன்னிமுத்து திரு.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 19.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. இவ்வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை இரத்து செய்ய நான் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் எனது தந்தைக்கு இரண்டு குழந்தைகள் தான் என்றும், மாரியப்பன் என்பவர் யாரென்று தெரியாது என்றும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சாட்சியளித்த அய்யனார் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது அண்ணன் ஆவார். மாரியப்பன் இறந்த பின்னிட்டு அவரது மகன் ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தினாரா என்றால் இல்லை. பிச்சைக்காரர் மகன் மாணிக்கம் என்பவரை தெரியுமா என்றால் தெரியும்.

2. சேவகன் மகன் ராஜப்பன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். இருளன் மகன் தாண்டவன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர்கள் ஊர் பஞ்சாயத்தார்களா என்றால் அப்போது இருநதார்கள். தற்சமயம் தாண்டவன் உயிருடன் இல்லை. மேற்படி ராஜப்பன் மற்றும் மாணிக்கம் இருவருக்கும் எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 70 வயது இருக்கும். எனது அண்ணன் மாரியப்பன் எப்போது இறந்தார் என்றால் எனக்கு சிறுவயது இருக்கும் போதே இறந்துவிட்டார். அப்போது எனக்கு என்ன வயது என்றால் சுமார் 10 வயது இருக்கும். மாரியப்பன் மகன் இரவி என்றால் சரிதான். இரவியும் உயிருடன் இல்லை என்றால் சரிதான். 1996 ல் பஞ்சாயத்தில் பேச்சு வார்த்தை எதுவும் நடத்தினோமா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பஞ்சாயத்தார்கள் கையெழுத்து பற்றி தெரியுமா என்றால் அது அவர்களாக போட்டு கொண்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி அய்யனார் கையெப்பம் செய்து உள்ளார் என்றால்

அது பொய் ஆகும். வா.சா.ஆ.1 ல் நான் கைரேகை வைத்துள்ளேன் என்றால் அது என்னுடையது அல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள கைரேகையை எனது கைரேகையுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. எனது தந்தை காத்தான் தாவா சொத்தை ஏக்கர் 1.19 செண்ட் நிலத்தை குத்தகைக்க ஓட்டி வந்தார் என்றால் சரிதான்.

4. எனது தந்தை காத்தான் அரசுக்கு சொந்தமான சுமார் 12 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தந்தை அனுபவம் செய்து வந்ததின் அடிப்படையில் அவரது பெயரில் நத்தம் பட்டா வழங்கப்பட்டது. எனது தந்தையின் இறப்பிற்கு பிறகு மாரியப்பன் வாரிசுகள் குளித்தலைக்கு வந்துவிட்டார்கள். நானும், அய்யனாரும் மட்டுமே எங்கள் கிராமத்தில் இருந்தோம். நானும், அய்யனாரும் வசித்து வந்த காலகட்டத்தில் தான் எனது தந்தை அனுபவம் செய்து வந்த 12 செண்ட் நிலத்திற்கு அரசாங்கத்தால் எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணம் 1994 ம் ஆண்டு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டா என்றால் சரிதான்.

5. மேற்படி 12 செண்ட் பட்டா நிலத்தையும், ஏக்கர் 1.19 செண்ட் நிலத்தையும் ஆகியவற்றையும் சேர்த்து பஞ்சாயத்து முச்சலிக்கா ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அய்யானாருக்கு பிரித்த நிலத்தை மாரியப்பன் மகன் பிச்சையம்மாளுக்கு பத்திரம் செய்து கொடுத்துள்ளார்களா என்றால் சரிதான். மேற்படி 12 செண்ட் நிலத்தை தாலா 4 செண்ட் நிலமாக மூன்றாக பிரித்து அதில் அய்யனாருக்கு பிரிந்த 4 செண்ட் நிலத்தை தான் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 12 செண்ட் நிலமானது அய்யானருக்கும் எனக்கும் தலா 6 செண்ட் வீதமாக இரண்டாக பிரிக்கப்பட்டு எங்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது. வீட்டுமனை பட்டாவானது மூன்று நபர்கள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

6. இரண்டு நபர்களின் பெயரில் தான் உள்ளது. எனது பெயரிலும் அய்யனாரின் பெயரிலும் உள்ளது. குத்தகை ஓட்டி வந்த நிலத்தின் உரிமையாளர் பெயர் என்ன என்றால் அது செட்டி பண்ணையின்

நிலமாகும். அவரின் பெயர் நியாபகம் இல்லை. மேற்படி செட்டி பண்னை என்பவர் வாதிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தை பொறுத்து இரசீதுகள் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 இரசீதுகள் பொய்யான இரசீதுகள் ஆகும். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்போ, காலல் நிலையத்தில் புகாரோ கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 16.03.2011 தேதியிட்ட பி.சா.ஆ.3 தானசெட்டில் மென்ட் பத்திரம் பற்றி தெரியுமா என்றால் படித்து பார்த்தால் தான் தெரியும். எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்படும் என்றால் சரியல்ல.

7. காத்தானுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தில் அவரது வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணம் எனது மகன்கள் பெரியசாமி, ஜகநாதன் ஆகியோர் தங்களுக்குள் பாகம் பிரித்த பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.4 ஆவணமானது வாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. சர்வே எண்.529/10 நிலமானது தற்போது எத்தனை உட்பிரிவுகளாகியுள்ளது என்றால் இரண்டு பிரிவுகளாக எனது பெயரிலும், அய்யனார் பெயரிலும் உட்பிரிவாகியுள்ளது. அய்யனாருக்கு 6 சென்ட்டும், எனக்கும் 6 சென்ட் நிலமும் உட்பிரிவாகியுள்ளது.

8. சர்வே எண். 529/10 B , 529/10C நிலமானது எனது மகன்களான பெரியசாமி மற்றும் ஜகநாதன் ஆகியோருக்கு தலா 3 சென்ட வீதம் உட்பிரிவாகியுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் யாவும் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எனது பூர்வீக நிலம் என்றும், கடந்த 1996ம் ஆண்டு தாவா சொத்து பொறுத்து பாக பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வாதிகள் அவர்களுக்கு பிரிந்த 4 சென்ட் நிலத்தை தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார்கள் எனறால் சரியல்ல. வாதிகளுக்கு பாக பிரிவினை படி பிரிந்த சொத்துக்களில் உள்ள அவர்களது அனுபவத்தை நாங்கள் இடையூறு செய்வதால் தான் இவ்வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

9. வாதிகளுக்கு நான் கொலை மிரட்டல் விட்டதாக வாதிகள் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரணை மேற்கொண்டதில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு உரிமை இல்லை என்று கூறிவிட்டேன். வாதிகளின் அமைதியான அனுபவத்தை நாங்கள் இடையூறு செய்ததால் தான் இவ்வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**